# இலங்கை சுற்றுலா மேம்பாட்டு அதிகாரசபை

## வாய்ப்பு விளம்பரம்

**சமையல்காரரர் (தேசிய ஓய்வு விடுதி - பதவி வெற்றிடங்கள் 02)**

**பதவிக்குரிய அலுவலகக் கடமைகள்**

- பணிநிலையத்தினுள் துப்புரவேற்பாட்டு சுகாதாரப் பாதுகாப்பு தர நியமங்களை பேணுதல்.
- உணவுகள் தயாரிக்கப்படுகின்ற இடத்தை சுத்தமாக வைத்திருத்தல்.
- தயாரிக்கப்படும் உரிய உணவு வகைளுக்கு தேவையான மசாலாப் பொருட்களை அளந்தெடுத்தல்.
- உணவு வகைகளுக்கு ஏற்ப அல்லது கிடைக்கும் சமையல் கட்டளைக்கு அல்லது வாய்மொழியாகக் கிடைக்கும் அறிவுரைகளுக்கு இணங்க உணவுப் பட்டியலைத் தயாரித்தல், திட்டமிடுதல் மற்றும் உணவுகளைத் தயாரித்தல்.
- காலத்திற்குக் காலம் வித்தியாசமான உணவுப் பட்டியல்களைத் தயாரித்தல்.
- அவ்வாறு தயாரித்த உணவுகள் தேவையான தரத்திலும் மற்றும் அளவிலும் உள்ளனவா என்பதை உறுதிசெய்துகொள்ளல்.
- தூய்மையாகவும் சுகாதார ரீதியில் பாதுகாப்பாகவும் உணவுகளையும் பானங்களையும் தயாரித்தல்.
- வித்தியாசமான வகை உணவுகளையும் பானங்களையும் தயாரித்தல்.
- பணிநிலையத்தில் தேவையான பொருட்களை சுத்தமாக களஞ்சியப்படுத்தி வைத்தல்.
- உணவுகளைத் தயாரிக்கும் நேரத்தை ஒருங்கிணைக்கும் வகையில் நாளாந்த உணவுகளின் தரவுகளை அடிப்படையாகக்கொண்டு முகாமையாளருடன் இணைந்து பாவிக்கப்படும் பாத்திரங்களையும் மற்றும் செயற்பாடுகளையும் பட்டியல்படுத்துதல்.
- நுகர்வோரின் உணவுக் கட்டளைகளுக்கு இணங்க உணவுப் பொருட்களை வழங்குதல்.
- பிரிவுத் தலைவரும்/அல்லது நிறுவன தலைவரும் பணிக்கும் ஏனைய அலுவலப் பணிகளை நிறைவேற்றுதல்.

**தகைமைகள்**

**வெளிவாரி விண்ணப்பதாரர்கள்**

மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீரித்துள்ள ஒரு தொழில்நுட்ப / வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய தொழில் தகைமை (NVQ) இரண்டாம் (2) மட்டத்திற்குக் குறையாத ஒரு சமையல்காரர் பதவிற்குரிய ஒரு திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**உள்ளக விண்ணப்பதாரர்கள்**

உரிய பிரிவில் ஐந்து (5) வருட கால அனுபவத்தையும் ஒரு தொழில்நுட்பக் கல்லூரி/ தொழில் பயிற்சி நிறுவகம் உரிய பதவியின் அலுவலகக் கரும பணிகளுக்கு ஏற்ப நடாத்தும் ஒரு பரீட்சையின் (செயன்முறைப் பரீட்சை) மூலம் உறுதிசெய்யப்படும் தேசிய தொழில் தகைமை (NVQ) இரண்டாம் (2) ஆம் மட்டத்திற்குக் குறையாத ஒரு திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

அல்லது

பதவியின் கரும பணிகளுக்கு ஏற்ப மூன்றாம்நிலை மற்றும் வாழ்க்கைத்தொழில் கல்வி ஆணைக்குழு அங்கீரித்துள்ள ஒரு தொழில்நுட்ப/வாழ்க்கைத்தொழில் பயிற்சி நிறுவகம் வழங்கும் தேசிய தொழில் தகைமை (NVQ) இரண்டாம் (2) மட்டத்திற்குக் குறையாத ஒரு திறன் சான்றிதழைப் பெற்றிருத்தல்.

**வயதெல்லை**
18 வயதுக்குக் குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதாகாது.

**சம்பள அளவுத்திட்டம்**
PL 2 ரூ. 25,750/- 10 **x** ரூ.270/- 10 **x** ரூ.300/- 10 **x** ரூ.330/- 12 **x**ரூ.350/- ரூ.38,950/-

**ஆரம்ப சம்பளப் படிநிலை**
ரூ. 25,750/- + வாழ்க்கைப்படிச்செலவுக்குக் கொடுப்பனவு + விஷேட கொடுப்பனவு

**நன்மைகள்**
- ஊழியரையும் அவரின் குடும்ப அங்கத்தவர்களையும் உள்ளடக்கிய கவர்ச்சியான ஒரு மருத்துவக் காப்புறுதித் திட்டம்
- கடன் வசதிகள்
- தொழில் முன்னேற்றத்திற்கான பயிற்சி வாய்ப்புகள்
- போக்குவரத்துக் கொடுப்பனவு

*குறிப்பு*
***தெரிவுசெய்யப்படும் விண்ணப்பதாரர்கள் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையின் அனுராதபுர, கதிர்காமம், பண்டாரவளை மற்றும் நுவரெலியா இடங்களில் அமைந்துள்ள எந்த ஒரு தேசிய ஓய்வு விடுதியிலும் பணியாற்றுவதற்குத் தயாராக இருத்தல் வேண்டும்.***

அக்கறையுடைய குறித்த தகைமைகளைப் பூர்த்திசெய்த விண்ணப்பதாரர்கள் **https://www.sltda.gov.lk/en/careers** என்ற எமது இணையத்தளத்திலிருந்து விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளலாம்**.**

நீங்கள் தொழிலுக்குப் பொருத்தம் என நினைத்தால் விண்ணப்பங்களைப் பூரணப்படுத்தி உறவினர்கள் அல்லாத இரண்டு நபர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு, உங்களின் சுய தகவல் அறிக்கையையும் (**CV**), கல்வி/தொழில் தகைமை சான்றிதழ்களின் பிரதிகளுடனும், சேவை அனுபவத்தை உறுதிப்படுத்துகின்ற சான்றிதழ்களின் பிரதிகளுடனும் பதிவுத் தபாலில் தலைவர், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை, இலக்கம் 80, காலி வீதி, கொழும்பு 03 என்ற முகவரிக்கு **13.12.2024** ஆம் திகதிற்கு முன்னர் அனுப்பிவைக்க வேண்டும்.

விண்ணப்பிக்கப்படும் பதவி கடித உறையின் இடதுபக்க மேல்மூலயில் குறிப்பிடப்படுதல் வேண்டும்.

அரசாங்கத் திணைக்களங்களில் / அரச கூட்டுத்தாபனங்களில் / நியதிச்சட்ட சபைகளில் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை அந்தந்தத் திணைக்களத் தலைவரின் ஊடாக அனுப்பிவைக்க வேண்டும்.

**தலைவர்**
**இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை**
**இலக்கம் 80**, **காலி வீதி**,
**கொழும்பு 03**